1979 நவம்பர் 10] [டாக்டர் கே. சமரசம்]

6. பள்ளி ஆயாக்களுக்குப் பள்ளிகளில் முழு நேர வேலை யில்லாததால் அவர்களுக்குச் சம்பள விகிதம் நிர்ணயிக்கத் தேவை இல்லை எனவும் அரசு முடிவெடுத்தது.

7. எனினும், ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆயாக்கள் நியமனம் அவர்களுக்கு அளிக்கத்தக்க சம்பள விகிதங்கள் ஆகியவற்றைப் பற்றி பொதுவான கொள்கை ஒன்று வகுப்பது அரசின் பரி சீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, அளிக்கப்பட்டு உள்ள அறிக்கையில் 1974-75-ல் நியமிக்கப்பட்ட பகுதி நேர ஆயாக்களுக்கு 75 ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டது. பிறகு ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக் கணக்குத் தணிக்கை அறிக்கையில் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக அவர்களுடைய சம்பளம் 18 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. கடைசியில் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆயாக்கள் நியமனம் அவர்களுக்கு அளிக்கத்தக்க சம்பள விகிதங்கள் ஆகியவற்றைப் பற்றி பொதுவான கொள்கை ஒன்று வகுப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சொல்லியிருக் கிறார்கள். அப்படிப் பரிசீலிக்கும்போது 18 என்று இருப்பதை முன் போலவே மாற்றியமைக்கவும், முழு நேர ஆயாக்களுக்கு 255 ரூபாய் வழங்கப்படுவதை கருத்திற் கொண்டு இவர் களுடைய சம்பளத்தை நிர்ணயிக்கவும் அரசு உத்தரவிடுமா ? அரசு உத்தியோகம் பார்த்து அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழி இல்லை என்ற நிலையை அரசு மாற்றுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கருணையோடு அரசு பரிசீலிக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(10) திருவில்லிப்புத்தூர், பென்னிங்டன் அங்காடி கையகப்படுத்துவது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவரவர்களே, "திருவில்லிப்புத்தூரில் அமைந்துள்ள பென்னிங்டன் அங்காடி யினை கையகப்படுத்தும் செயற்குறிப்பினை கைவிடப் போவதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்ததால் அங் குள்ள மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட் சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவை யில் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

[திரு. கா. காளிமுத்து] [1979 நவம்பர் 10

அறிக்கை.

பென்னிங்டன் மார்க்கெட் என்பது பென்னிங்டன் மார்க்கெட் கமிட்டியால் நடத்தப்படும் ஒரு தனியான மார்க்கெட் ஆகும். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அதன் தலைவர் ஆவார். அதிலுள்ள 145 கடைகளும் ஏலத்தில் விடப்பட்டு, அந்தப் பணத்தை பென்னிங்டன் நூலகத்தை கவனிப்பதற்குச் செலவு செய்யப்படுகிறது. திருவில்லிப்புத்தூர் நகராட்சி தனது தீர்மான எண். 360, தேதி 28—9—1973-ல் மேற்கண்ட மார்க்கெட்டை கையகப்படுத்தி, திருவில்லிப்புத்தூர் நகராட்சியிடம் ஒப்படைக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டுள்ளது. இவ்வாறு செய்வதினால் நகராட்சியின் வருமானம் அதிகமாகி பொது மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்யலாம். பென்னிங்டன் மார்க்கெட் கமிட்டி கவனித்துக் கொண்ட மாதிரியே நூலகத்தைப் பாதுகாத்து கவனிப்பதற்கும் இந் நகராட்சி ஏற்றுக் கொண்டது. கையகப்படுத்தும் திட்டத்தைத் தீவிரமாக நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டபொழுது மாவட்ட வருவாய் அதிகாரி பென்னிங்டன் மார்க்கெட்டின் கடைகள், கட்டிடங்களைக் கையகப்படுத்துவதற்கு ரூ. 3,50,800 செலவாகும் என்று கூறி உள்ளார். ஆனால் நகராட்சியின் நிதி நிலைமை பற்றாக் குறையாக இருப்பதால் நிலைமை அபிவிருத்தி அடையும் வரை இத் திட்டத்தைக் கைவிடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருந்தார்.

2. இந்த மார்க்கெட்டில் உள்ள கட்டிடங்களையும் கடைகளையும் கையகப்படுத்தினால் இந்த நகராட்சியின் நிதி நிலைமை முன்னேற்றம் கண்டு பொது மக்களுக்கு நிறைய வசதிகள் செய்ய முடியுமாதலால், கையகப்படுத்துவதற்கு வேண்டிய பணத்தை வருவாய் தரும் சாதனங்கள் அபிவிருத்தி செய்யும் அரசினரின் திட்டத்தின் கீழ் ரூ. 6,00,000 கடன் பெற்று மார்க்கெட்டை கையகப்படுத்த திருவில்லிப்புத்தூர் நகராட்சி தீர்மானித்துள்ளது. நகராட்சி ஆணையரும் கோரிக்கையினை நகராட்சிகளின் ஆய்வர் வழியாக அனுப்பியுள்ளார்.

3. பென்னிங்டன் அங்காடி நகராட்சியினால் கையகப்படுத்தப் பட்டால் மேற்படி அங்காடிக் குழுவிற்கு நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்றும், அங்காடி குழு, திருப்திகரமாக இயங்காததினாலும் அதன் நிதியினை முறை தவறி செலவு செய்வதாலும், குழுவினைக் கலைத்து விடுவதை விட, அக் குழுவின் செயல் முறைகளை அரசே மேற்கொள்ளக் கூடிய அளவில் ஒரு புதிய சட்டம் இயற்றினால் அரசு நஷ்ட ஈடாக எந்தவித தொகையும் கொடுக்க வேண்டியிருக்காது எனவும் இராமநாதபுரம் ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

4. திருவில்லிப்புத்தூர் நகராட்சியின் கோரிக்கையின் மீதும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரது கருத்துருவின் மீதும், நகராட்சி ஆய்வரது பரிந்துரை வரப்பெற்றதும், சட்டத்துறையுடன் கலந்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

5. இதன் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் எவ்வித பதட்ட நிலையும் ஏற்படவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய அறிக்கையைப் பார்த்தேன்; படித்தேன் ; மிகவும் ரசித்தேன் ; மகிழ்ச்சியடைந்தேன். என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அவர்களுக்கு நன்றி கலந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் பென்னிங்டன் மார்க்கெட்டை கையகப்படுத்தி, அதை ஒரு பொது ஸ்தாபனத்திற்காகப் பயன்படுத்த இருப்பதால், அதற்கு நஷ்ட ஈடு கேட்டு கோர்ட்டுக்குப் போகும் சூழ்நிலை இருப்பதால், அதைத் தடுக்கச் ஒரு தனி சட்டம் கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நன்றி தெரிவித்ததற்கு நன்றி. திரு. தாமரைக்கனியின் கருத்து கனிகின்ற நிலையில் இருக்கிறது.

11) கன்னியாகுமரி மாவட்டம் அரசுத்துறை இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு ரா. கிருஷ்ணன் இருவரும் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள் ; அவர்களில் ஒருவர் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசுத் துறை இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் மக்களிடையே நிலவும் பதட்ட நிலைக் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.